

முத்தமிழறிஞர், தமிழ்நாட்டின் சுயமரியாதை தலைவர், ஓய்வுவறியா உதயசூரியன் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில், கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ் முன்னிலையில், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துசாமி ஆட்டோ ஓட்டுனர்களுக்கு, மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மருத்துவச்சி லட்சுமி குப்புசாமியின் மருத்துவ சேவையை பாராட்டி வெகுமதி வழங்கினார். நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, வி.சி.சந்திரகுமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, ப.க.பழனிச்சாமி மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், சமூக ஆர்வலர் அன்பழகன் உள்ளிட்ட கழகநிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள், மற்றும் பொது மக்கள் பலர் உள்ளனர்.

### ஏ.ஜெ. பவுல் ஏற்பாட்டில் – என்.இ.கே. மூர்த்தி முன்னிலையில்

# திருவேற்காட்டில் - கலைஞர் பிறந்தநாள் மாபெரும் கால்பந்து போட்டி!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசுகள் வழங்கினார்!

திருவள்ளூர், ஜூன் 8 - தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம், திருவேற்காடு நகரம் அயனம் பாக்கத்தில் மாபெரும் கால்பந்து போட்டி நடைபெற்றது.

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ. பவுல் ஏற்பாட்டிலும், திருவேற்காடு நகரக் கழக செயலாளர் என். இ. கே. மூர்த்தி முன்னிலையிலும் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இறுதிப் போட்டியை தொடங்கி வைத்தார்.

பின்னர் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்குமாபெரும்கோப்பை மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கி பாராட்டினார். தொடர்ந்து பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது டன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறப்புரையாற்றிய ஆவடி சா.மு. நாசர், "இளைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து, விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் கலைஞர் அவர்கள் பல்வேறு திட்டங்களை உருவாக்கினார். அந்த வழியில் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான முன்னாத்தை திமுக அரசு விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சி, ஊக்கத்தொகை, வேலை வாய்ப்பு முன்னுரிமை, விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 'தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை' மூலம் திறமையான விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கிராமப்புற இளைஞர்களின் விளையாட்டுத் திறனை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், கழக நிர்வாகிகள் ம. விநாயகம், டி. தெய்வசிகாமணி, பிரதானம், ஐ. ஜேக்கப், செல்லதுரை, விஜய் சாரதி, அப்பு (எ) ஜெபராஜ், ஆ. நாராயணன், நரேஷ்குமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## புதுக்கோட்டை மு.பஷீர் அகமது தலைமை!

சென்னை, ஜூன் 8 - தி.மு.க. அயலக அணி குவைத் நடத்திய நவீன தமிழ்நாட்டின் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா குவைத்தில் உடன் பிறப்புகளோடு மிக எழுச்சியாக 05.06.2026 வெள்ளிக்கிழமை அன்று கொண்டாடப்பட்டது.

கழகத்தலைவர் திராவிட நாயகர், தளபதி மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது அவர்களின் தலைமையில், இணைச் செயலாளர்கள் காட்டூர் ஆறுமுகம், முனசந்தை சிக்கந்தர், வேலம் புதுக்குடி மு.ஜியாவுதீன், ராயல் ஜி.பிரகாஷ் அவர்களின் முன்னிலை யில், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் புதுகை கனி, துணைச் செயலாளர் கண்டியூர் ரா.ஷாத் அன்வர்,இளைஞர் அணி இணைச் செயலாளர் விருதாச்சலம் பாஃரூக் காசிம் அவர்களின் ஒருங்கிணைப்பில் குவைத், பர்வானியா பகுதியில் அமைந்துள்ள ராயல் பேலஸ்ஸில் இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் முத்தமிழறிஞர் கலைஞரின் வரலாற்று சிறப்பு மிக்க சாதனைகளையும், துரோகிகளின்துரோகங்களையும் ஆலோசகர் பெரியவர் ஆலஞ்சியார் அவர்கள் இளையோர்களுக்கு எடுத்துறைத்தார்கள். வரலாற்று சிறப்புமிக்க இந்நிகழ்வில் உடன்பிறப்புகளாய் அயலக தேசத்தில் ஒண்றினைந்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வவில் மனப்பாறை குமார், வரகூர் செந்தில் ராஜா, காரைக்குடி மணி,சிதம்பரம் அல்தாப் உசேன், கண்டியூர் இலியாஸ், தளவாய் தினேஷ், வெங்கட், அறந்தாங்கி மணி,கறம்பக்குடி ஜாபர் சாதிக், கறம்பக்குடி அப்பாஸ், கொளத்தூர் கணேஷ், திட்டச்சேரி ஹமீத், மேலூர் கார்த்தி, ஜான்பாஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக வாணியம்பாடி அசோக்குமார் நன்றியுரை நிகழ்த்தினார்.





சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி5 உலகமே போற்றும் சிந்தனையாளர்! உரிமையை காக்க களமாண்ட வீரர்!! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலையில் திமுக சட்டமன்ற துணைக் கொறடா கோவி செழியன் எம்.எல்.ஏ., மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு அறுசுவை உணவினை வழங்கினார். இதில் கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதி கழக செயலாளர் பசுபதி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மின் கழக தொ.மு.ச. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

சென்னை, ஜூன்.8– திராவிட மாடல் நாயகர் கழக தலைவர் அன்பு தளபதி அவர்களின் அறிவிப்பிற்கினங்க தமிழினத்தின் பெருமை, சமூகநீதியின் பேரொளி, உழைக்கும் மக்களின் உற்ற தோழன், தொழிலாளர்களின் காவலர், ஏழை எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், முத்தமிழின் மாமேதை, நமது உயிரினும் மேலான தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்த நாள் விழா வருகிற 03.06.2026 அன்று தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், சென்னை வடக்கு திட்டம் சார்பில் சிறப்பாகவும் எழுச்சியுடனும் கொண்டாடப்பட்டது

மின்வாரிய தொழிலாளர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காகவும், தொழிலாளர் உரிமைகள் பாதுகாப்பிற்காகவும் எண்ணற்ற வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்தி யவர் தலைவர் கலைஞர். தனது ஆட்சிக் காலங்களில் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வுகளை வழங்கியதுடன், ஏறக்குறைய 71,600 ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய மாமனிதர் ஆவார்.

மின்வாரிய தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வலிமையான கவசமாக விளங்கும் அரசாணை எண் 100, முத்தரப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு தொழிலாளர் நலத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்திய பெருமை தலைவர் கலைஞர் அவர்களையே சாரும். இன்று மின்வாரிய தொழிலாளர்கள் அனுபவிக்கும் பல்வேறு நலன்களின் அடித்தளமாக அவரது தொலைநோக்குப் பார்வையும் தொழிலாளர் பாசமும் திகழ்கிறது.

அவரது உயரிய கொள்கை வழியில் பயணிக்கும் கழகத் தலைவரின் தலைமையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் மின்வாரிய தொழிலாளர்களுக்கு வரலாறு காணாத வகையில் இருமுறை ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசின் தனியார்மய முயற்சிகளுக்கு அடிபணியாமல், தலைவர் கலைஞர் உருவாக்கிய தொழிலாளர் நலக் கொள்கைகளும் உரிமைகளும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

காலை 9.00 மணியளவில் சென்னை வடக்கு திட்டம் சார்பில் தண்டையார்பேட்டை கோட்டம், நாப்பாளையம் அலுவலகத்தில்,110 கே.வி.மணலி துணை மின் நிலையத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, தொ.மு.ச. பேரவை கொடியேற்றி, இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது மதியம் 1.30 மணியளவில் சென்னை வடக்கு திட்டம் சார்பில் தண்டையார் பேட்டை கோட்டம் மணலி புதுநகர் வினாயகர் முதியோர் அன்பு இல்லத்தில் உள்ள முதியோர் அனைவருக்கும் அறுசுவை உணவு தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் மாநில முன்னாள் தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் வழங்கினார் உடன் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் பொருளாளர் டி.அருள்,து.தலைவர்கள் ஏ.ராஜேந்திரன்,சி.சிவப்பிரகாசம் திட்ட துணை செயலாளர்கள் ஆர்.சங்கர், வேதமணி தண்டையார் பேட்டை கோட்ட செயலாளர் எம்.இளங்கோவன் கோட்ட தலைவர் கணபதி, நாம்பாளையம் கிளை ரவி,முத்து, ஜெயசந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# "அவருக்குத் தெரியவில்லை"

அவருக்குத் தெரியவில்லை
அரசு நாற்காலிக்கு
நான்கு கால்கள்
கடமை கண்ணியம்
கட்டுப்பாடு கனிவு

அவருக்குத் தெரியவில்லை
அந்த
நாற்காலியின் குணம்
தங்கத்தட்டில் வைத்த
சோறாக
இருக்க வேண்டும்
தகரத் தட்டில் வைத்த
நரகலாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
அந்த நாற்காலியின் தரம்
மலரை மொய்க்கும்
வண்டாக
இருக்க வேண்டும்
மலத்தை மொய்க்கும்
ஈயாக அல்ல

அவருக்குத்
தெரியவில்லை
அந்த
நாற்காலியின்
குரல்
சந்தனக் குழைவாக
இருக்க வேண்டும்
சாக்கடைக் கழிவாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
அந்த
நாற்காலியின் கம்பீரம்
கொள்கையின் உயரமாக இருக்க
வேண்டும்
கட்டைக்கால் உயரமாக அல்ல
அவருக்குத் தெரியவில்லை

அந்த
நாற்காலியின் துணிவு
பருந்துப் பாய்ச்சலாக
இருக்க வேண்டும்
ஊர்க்குருவி கூச்சலாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
கோட் சூட் போடுவது
முக்கியமல்ல
தமிழர்கள் கோவணாண்டி
ஆகக் கூடாது
என்பதே முக்கியம்

தனிவிமானத்தில்
சிகை அலங்கார நிபுணரோடு
செல்வது முக்கியமல்ல
ஒன்றியம்
தமிழ்நாட்டை மொட்டையடிக்கக்
கூடாது
என்பதே முக்கியம்

நரம்பு புடைக்க
வசனம் பேசுவது
முக்கியமல்ல
சமூகநீதி சமநீதி
மெலியக் கூடாது என்பதே முக்கியம்

என்ன சொல்லி
என்ன பிரயோஜனம்?

அவருக்குத் தெரியவில்லை
எதுவுமே



**ஆண்டாள் பிரியதர்ஷினி**
திமுக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 பிறந்தநாளில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூர் பேரூர் கழகம் சார்பில் அமைக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கே.ஆர்.என்.போஸ், டி.செல்வம், பி.அண்ணாதுரை, ஜெ.அசரப் அலி, ஆ.ராஜேந்திரசோழன், எம்.ஏ.எம்.இம்தியாஸ் வி.எஸ்.பழனி, எழில் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு நெசவாளர் அணியின் சார்பில் கழக நெசவாளரணி துணைச் செயலாளர் கி.சரவணன் பவானி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவியருக்கு பாராட்டும், வெகுமதியும் வழங்கினார். நிகழ்வில் கழக நிர்வாகிகள், ஆசிரிய பெருமக்கள் பலர் உள்ளனர்.